REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மார்கழி 2உ சனி (17—12—55) ★ ★ வெளியூர்: மார்கழி 3உ ஞாயிறு (18—12—55) [இதழ் 159

நூல் நூற்கப் புதிய இயந்திரம்

கையாலும், விசையாலும் இயக்கலாம்

பரோடா, டிச. 16—

கையினாலும், மின்சார விசையினாலும் இயக்கக்கூடிய நூற்பு இயந்திரம் ஒன்றை பரோடா ஜவுளித் தொழில் ஆராய்ச்சி நிறுவனம் கண்டுபிடித்திருக்கிறதாம்.

விரைவிலேயே இது பெரும் அளவில் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு அனுப்பப்படுமாம்.

(4-ம் பக்கம் பார்க்க)

அரசியல்வாதிகளே மாணவர்களின் 'ஒழுங்கின்மைக்கு காரணம்'

'மக்கள் சபை உறுப்பினர்களே ஒழுங்குமுறையுடன் நடந்துகொள்வதில்லை'

'ஒழுங்கு நிலவச்செய்வது பெற்றோர்-ஆசிரியர் கூட்டுப் பொறுப்பாகும்'

மாநிலங்கள் சபையில் இலட்சுமி மேனன் கருத்து

புதுடில்லி, டிச. 16—

"மாணவர்களிடையே நிலவும் ஒழுங்கின்மைக்கான காரணங்களுக்கு மாணவர்கள் பொறுப்பல்ல; மக்கள் சபை உறுப்பினர்கள், மற்றும் அரசியல்வாதிகள் போன்றோர்தான் அதற்குக் காரணமானவர்களாவர்.

"மாணவர்கள், சமூகத்தின் ஒரு பகுதியினரேயாவர். சமுதாயத்தில் நிலவும் ஒழுங்கான நடத்தையின்மையைத்தான் அவர்கள் பிரதிபலித்திருக்கின்றனர்.

"அரசியல் போராட்ட காலத்தில் மக்கள், சட்டங்களை மறுக்கவும், தகர்க்கவுமான வேலைகளில் ஈடுபட்டிருந்தனர்; மாணவர்களும் அச்செயலில் ஈடுபடுமாறு தூண்டப்பட்டனர்; ஆனால், சுதந்திரத்திற்குப் பிறகு அரசியல்வாதிகளும், தலைவர்களும், ஆசிரியர்களும், மாணவர்களுக்கு முன் மாதிரியாக விளங்கக்கூடிய ஒரு வாழ்க்கைமுறையை மேற்கொள்ளத் தவறிவிட்டனர்.

"ஜன்னல்களை உடைப்பதிலும், போலீசார் தலையிட்டை வருந்தி அழைப்பதிலும் ஒழுக்கக்கேடு இருக்கவில்லை.

"மக்கள்சபை உறுப்பினர்களிடை நிலவும் ஒழுக்கக்கேட்டைக் குறித்து நான் குறிப்பிடுவது உசிதமாயிருக்காது

"மக்கள்சபை நடவடிக்கைகளைக் கூர்ந்து கவனிக்கும் மாணவர்களில் சிலர். சில நாட்களுக்கு முன்பு மூன்றும் வகுப்புப் பிரயாணக் கஷ்டத்தையும் தாங்கிக்கொண்டு இங்கு வந்து மக்கள் சபையின் இரு பிரிவுகளையும் கண்டனர். சம்பளமும், படியும், 'மக்களின் பிரதிநிதிகள்' என்ற பட்டமும் பெற்றுக்கொண்டிருக்கிற உறுப்பினர்கள் தங்கள் இடங்களில் இல்லை—சபைகள் காலியாயிருந்தன என்பதைக் கண்ணுற்ற அவர்கள் திடுக்கிட்டுப் போய்விட்டனர்.

"அந்த மாணவர்கள் வகுப்புக்களுக்குச் சென்றதும் அங்கு ஆசிரியர்கள், 'வகுப்புகளிலேயே மாணவர்கள் இருக்க வேண்டும்—பாடத் திட்டங்களை ஒழுங்காகப் பின்பற்ற வேண்டும்' என்று கூறினால் கேட்பார்களா?

"மாணவர்களிடை நல்லொழுக்கம் நிலவச் செய்யவேண்டியது, ஆசிரியர்—பெற்றோர் ஆகியோரின் கூட்டுப் பொறுப்பாகும்,"

—என்று, தோழியர் இலட்சுமி மேனன் (காங்.—பீகார்) *மாநிலங்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.*

'மாணவர்களிடை நிலவும் ஒழுக்கக்கேட்டிற்கான காரணங்களைக் கண்டறிந்து அவற்றை நீக்க ஆலோசனை கூறுவதற்காக ஒரு உயர்தர விசாரணைக் குழு நியமிக்கவேண்டும்,' என்ற மாநிலங்கள் சபையில் ஒரு உறுப்பினர் தெரிவித்த யோசனையை எதிர்த்துப் பேசுகையில்தான் தோழியர் இலட்சுமி மேனன் இப்படிக் குறிப்பிட்டிருக்கிறார்.

தேபர் முன்பு ஆர்ப்பாட்டம்

ஐதராபாத் விமான நிலையத்தில் பலர் கூடி தெலிங்கானா வேண்டுமெனக் கோரிக்கை

ஐதராபாத், டிச. 16—

டில்லியிலிருந்து விஜயவாடா செல்லும் வழியில் இங்கு வந்த அகில இந்திய காங்கிரஸ் தலைவர் யு. என். தேபர் முன்பாக பலர் கூடிநின்று, 'தெலிங்கானா மாநிலம் வேண்டும்' 'தெலிங்கானா தனியாகவே இயங்க வேண்டும் என்று குரல் எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தியிருக்கின்றனர்.

தங்கள் கோரிக்கைகளடங்கிய அட்டைகளையும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கி நின்றனர்.

தேபரை விமான நிலையத்தில் ஐதராபாத் முதன் மந்திரி இராமகிருஷ்ண ராவ் முதலானோர் வரவேற்றிருக்கின்றனர்.

தேபருடன் காங்கிரஸ் செயலாளர் ஸ்ரீமன் நாராயணன், ஆந்திரப் பிரதேசக் காங்கிரஸ் தலைவர் சத்தியநாராயண ராஜூ ஆகியோரும் வந்தனர்.

ஆர்ப்பாட்டம் குறித்து தேபர் எதுவும் தெரிவித்ததாகத் தெரியவில்லை.

மார்ஷலின் மகத்தான வெற்றி!

சிங்கப்பூர் சுய ஆட்சி பெற உடன்பாடு

தமிழ் உட்பட நான்கு மொழிகள் அரசோச்சும்!

லண்டன், டிச. 16—

பிரிட்டிஷ் காலனியாக விளங்கும் சிங்கப்பூருக்கு 'உள்நாட்டு சுயாட்சி' வழங்குவது பற்றி முதன் மந்திரி டேவிட் மார்ஷலுக்கும்—பிரிட்டிஷ் சர்க்காருக்குமிடையே இங்கு கடந்த ஒரு கிழமையாக நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் மார்ஷலின் கோரிக்கைக்கு மகத்தான வெற்றி கிடைத்திருக்கிறது

இருதரப்பினரிடையேயும் இது குறித்து ஏற்பட்டுள்ள ஒப்பந்தப்படி, 12 இலட்சம் மக்களைக் கொண்ட சிங்கப்பூரின் சகல கட்சிகளின் 'வட்ட மேசை' மாநாடு அடுத்த ஆண்டு ஏப்ரல் திங்களில் 23-ந் தேதியன்று லண்டனில் கூடும் என்று முடிவாகியிருக்கிறது

சிங்கப்பூரில் இப்போது ஒரு வரையறைக்குட்பட்ட சுயாட்சிதான் அமுலிலிருக்கிறது. சென்ற ஏப்ரலில் புது அரசியல் திட்டம் அமுலுக்கு வந்தது. அதை அடுத்து முதன் மந்திரி மார்ஷல் அங்கு மந்திரிசபை அமைத்தார்.

இன்று மார்ஷலும், பிரிட்டிஷ் சர்க்காரும் வெளியிட்டுள்ள கூட்டறிக்கையில், சிங்கப்பூரின் நான்கு மொழிகளையும் சட்டசபை அங்கீகரிக்கும் வகையில் அரசியல் சட்டத்தை சிபாரிசு செய்வதாக பிரிட்டிஷ் காலனி அமைச்சர் லெனுக்ஸ் பாயிட் கூறியிருக்கிறார்

'ஆங்கிலம், தமிழ், சீனம், மலாய் மொழிகளை அரசாங்க மொழிகளாக அங்கீகரிப்போம்,'

என்று, முதன் மந்திரி டேவிட் மார்ஷல் கூறினார்.

மற்றொரு அமைச்சரை நியமித்துக்கொள்வதற்கும் மார்ஷலுக்கு, பாயிட் சம்மதமளித்திருக்கிறார்.

இராணுவ பலத்தைப் பெருக்க முயற்சி

வட அட்லாண்டிக் நாடுகள் மும்முரம்?

பாரிஸ், டிச. 16—

எல்லாவகையாலும் ரஷ்யாவின் இராணுவ பலம் அதிகரித்திருப்பதால் அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகள் பதினைந்தும், தத்தமது பாதுகாப்புகளைப் பலப்படுத்த வேண்டும் என்று கூறி, அதற்கான திட்டம் ஒன்றை 'கவுன்சில்' அங்கீகரித்திருக்கிறது.

ரஷ்யாவின் படை பலம் 6,40,000 குறைக்கப்பட்டிருப்பது ஒரு பொருட்டல்ல என்று 'கவுன்சில்' கருதிற்றும்.

இந்திய—ரஷ்ய நட்பு எதிரொலி

அமெரிக்காவில் ஆத்திரம்

பொருளாதார உதவி கிடைக்காது?

வாஷிங்டன், டிச. 15—

இந்தியா—ரஷ்யா நட்பு, அமெரிக்காவில் பெரும் ஆத்திரத்தை மூட்டியுள்ளது, இப்போது பகிரங்கமாகத் தெரியவருகிறது.

இந்த ஆண்டு அமெரிக்கக் காங்கிரஸ் கூடும்போது, இந்தியாவிற்குப் பொருளாதார உதவி செய்யவேண்டும் என்ற கோரிக்கையை எழுப்புவதே கடினமாயிருக்கும் என்றும், அப்படி எழுப்பினாலும் கோரிக்கை வெற்றி பெறுவது முடியாத ஒன்று என்ற நிலையில்லாவிடினும், 'மிகக் கடினமானது' என்ற நிலை மலர்ந்திருக்கிறது என்றும் கூறப்படுகிறது.

இந்தியாவும்—ரஷ்யாவும் சேர்ந்து, ரஷ்யத் தலைவர்கள் சுற்றுப் பயண இறுதியில் வெளியிட்ட கூட்டறிக்கை, அமெரிக்க சர்க்கார் வட்டாரங்களில் பெரும் அதிருப்தியை மூட்டிவிட்டிருப்பதாயும், அந்த அறிக்கையினால் பெரும் சிக்கல்கள் எதிர்காலத்தில் தோன்றக் கூடும் என்றும் கூறப்படுகிறது.

கூட்டறிக்கையில், 'அண்மையில் ஜினீவாவில் நடைபெற்ற நான்கு வல்லரசு வெளிவிவகார மந்திரிகள் மாநாடு முடிவேதும் காணாது தோல்வியுற்றதற்குமேற்கு நாடுகளே காரணம்' என்று பொருள்படும்படியான வாசகங்கள் இருப்பதாயும், வேறு இந்த வாசகங்களை, இந்தப் பொருளுக்கு இலக்காக்கி அமைத்திருப்பார் என்று கூறுவதற்கில்லை என்றாலும், இப்படியும் வியாக்கியானம் செய்பவர்கள் அமெரிக்காவில் இருக்கிறார்கள் என்றும் உயர்தர அதிகார வட்டாரங்கள் கருதுகின்றனவாம்.

இந்தியாவிடம் நட்புறவு கொண்ட சில அரசியல் வாதிக

(8-ம் கலம் பார்க்க)

(5-ம் கலத்தின் தொடர்ச்சி.)

ளும், பத்திரிகைகளும், இந்தியாவின் இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு, அமெரிக்கா எத்தகு உதவி செய்ய முடியும் என்று யோசித்துக் கொண்டிருக்கும் போது, ரஷ்யத் தலைவர்கள் இந்தியாவிற்குச் சென்றதும், கூட்டறிக்கை வெளியிட்டதும் வருந்தற்குரியன என்று கருதுகின்றனராம்.

"பொதுவில் அமெரிக்கா, இந்தியாவிற்கு எதிர்காலத்தில் தொடர்ந்து பொருளாதார உதவி செய்யும் என்று உறுதியாக நம்புவதற்குரிய வாய்ப்புகள் மிகச் சிறியளவே உள்ளன என்றும் கூறப்படுகிறது.

'தேவிகுளம், பீர்மேடு தமிழகத்திற்கே உரியன!'

மக்கள் சபையில் அவினாசிலிங்கம் குரல்

புதுடில்லி, டிச. 16—

திரு-கொச்சியில் உள்ள தேவிகுளம், பீர்மேடு தமிழ்ப் பகுதிகளையும் சென்னை மாநிலத்துடன் இணைக்க வேண்டும்; இந்தப் பகுதிகளில் உள்ள மலையாள மக்கள் தொகை நிரந்தரமானதல்ல — அவர்கள் சாதாரணமாகப் போய் வந்து கொண்டிருப்பவர்கள்; எனவே, அப்பகுதிகள் தாய்த் தமிழகத்துடன் இணைய வேண்டுவது அவசியமாகும்,"

என்று, டில்லி மாநிலங்கள் சபையில், தோழர் டி. எஸ். அவினாசிலிங்கம் செட்டியார் வற்புறுத்தியிருக்கிறார்.

மேலும் பேசுகையில் அவர், ஆங்கிலத்திற்குப் பதில் இந்தியை அவசரப்பட்டு கொண்டுவரக்கூடாது என்றும்,' சிறுபான்மை மொழி பேசுவோருக்குத் தகுந்த பாதுகாப்புத் தரவேண்டும் என்றும், அதன் பின்னரே இந்தி பற்றிக் கவனிக்க வேண்டும் என்றும், வடநாட்டவர், தென்னாட்டு மொழிகள் சிலவற்றைக் கற்க வேண்டும் என்றும் வற்புறுத்திக் குறிப்பிட்டிருக்கிறார்.

பம்பாய் ஆலை முதலாளி கைது

பம்பாயில் உள்ள ஒரு பட்டு 'ரேயான்' தொழிற்சாலையின் அதிபரான ருஸ்தும்ஜி டி. துபாஸ் என்பவர், இறக்குமதிக் கட்டுப்பாட்டுச் சட்டத்தை மீறியதாகப் பம்பாய் விசேட போலீசாரால் கைது செய்யப்பட்டிருக்கிறாராம்

தொழிற்சாலையில் உபயோகிப்பதற்கென ரூ. 18,360 பெறுமான செயற்கைப் பட்டுநூலை வாங்கியதாயும், இந்த நூலை தொழிற்சாலையில் உபயோகிக்காமல் மார்க்கெட்டில் விற்றுவிட்டதாகவும் இவர்மீது குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

சென்னை 17—12—'55 சனி

கருத்திலிறுத்த வேண்டும்

இந்தியத் துணைக்கண்டம், மிகப் பரந்துவிரிந்த ஒரு பெரும் நிலப்பரப்பு; இங்கே, நோக்கும் திக்கெல்லாம் தித்திக்கும் கரும்பு முதல் தீஞ்சுவைக் கனிகள்வரை, உண்பதற்கான பொருள்கள் முதல் உடுப்பதற்கான ஆடை நெய்ய பருத்திவரை விளைவிக்கும் வயல்களும், வளங்களும் உண்டு.

நீண்ட நெடும் காறுைகள் இருக்கின்றன; நீர் நிலைகள் எண்ணற்றவை.

பூமியினுள்ளே பொன்னும், மற்றும் உலோகப் பொருள்களும், கருப்புத் தங்கமும், எரிபொருளாம் எண்ணெயும் ஏராளமாக உண்டு,

அகிலும் தேக்கும், மணக்கும் சந்தனமும் நிரம்பிய பெருங்காடுகள் உள்ளன; அங்கெல்லாம் கணக்கற்ற செல்வம் கிடைக்கும் வழிகளும் நிரம்ப உண்டு.

மாமலைகள் இருக்கின்றன; அங்கே விலையில்லா மாமருந்துகள் உண்டு. கனியும் காயும், தேயிலையும், காப்பியும், ரப்பரும் நிரம்பிய தோட்டங்களும் உண்டு.

கடல்கள் உண்டு—கப்பல்கள் செலுத்த, முத்துக்குளிக்க, மெலியோரை வலியோராக்கும் சத்துள்ள மீன்கள் பிடிக்க வசதிகள் உண்டு.

இத்தனைக்கும் மேலாக, மக்கட் செல்வமோ கொஞ்சமும் குறையவில்லை. முப்பத்தாறு கோடிப் பேர் வாழ்கின்றனர். தினந்தோறும் வளர்ந்தவண்ணமுள்ள செல்வமது!

இத்தனையும் உடையதாகும் எங்கள் 'இந்தியா'—என்று பெருமைப்படுகிறார்கள்; உண்மைதான். பெருமைக்குரிய செல்வங்கள் இருக்கத்தான் செய்கின்றன—இந்திய துணைக் கண்டத்தில். ஆனாலும்....?

வேலையில்லை — வாழ்வில்லை; வறுமை தரும் வாட்டமும், பசியும் பட்டினியும் படாதபாடு படுத்துகின்றன!

'படித்திருக்கிறோம் — பட்டம்கூட எங்களில் பலர் பெற்றிருக்கிறோம்; பட்டம் என்ன பசிபோக்கப் பயன்படும் உணவுப் பண்டமா? நிம்மதியற்று, வாழ்வின் எல்லைக் கோட்டில் சாவின் வாயிற்படியில் நின்றுகொண்டு தவிக்கிறோம்; வாழ்வு கிடைக்காதா என ஏங்குகிறோம்; ஏன், உயிரை இனியும், இனியதென எண்ண வேண்டும்? பாழும் வயிற்றிற்கு, உயிரின் இனிமையை உணரும் தன்மைதான் ஏது?' — என்று, போராட்டத்தில் ஈடுபடும் மனப்போக்கினராய், எண்ணற்ற மக்கள்—கோடிக்கணக்கில் திண்டாடுகின்றனர் என்பதை அறியும்போது, 'இத்தனை செல்வங்களைப் பெற்ற இந்தியா'—என்ற கூற்றை, 'பெருமைமிக்கது' என்று எப்படிக் கொள்ளமுடியும்?

'மக்களின் இல்லாமைக்கும்—ஏழ்மைக்கும், ஏக்கத்திற்கும்—தவிப்பிற்கும், வேலையில்லாத் திண்டாட்டத்திற்கும்—பல வேற்றுமைகளுக்கும், வெள்ளையரின் சுரண்டலே காரணம்' என்றனர் காங்கிரசார்.

வெள்ளையர் வெளியேறிய பின், ஆட்சிப் பொறுப்பிலும் அமர்ந்திருக்கின்றனர், அந்தக் கண்ணியவான்கள்— கடந்த எட்டாண்டுகளுக்கும் மேலாக!

'எல்லோரையும் வாழ வைப்பதே எங்கள் இலட்சியம்; திட்டங்கள் இதோ—நிபுணர்கள் அதோ; நிதி வழிகள் உங்களிடத்திலே; ஒத்துழைப்புத்தான் தேவை; பஞ்சம் பறந்துவிடும்; பற்றுக்குறை நீங்கிவிடும்; இல்லாமை ஒழிந்துவிடும்; வேலையின்மை அகன்றுவிடும்; பசியார உணவும், வெய்யிலாற நிழலும், மானங்காக்க உடையும் வழங்க வழிவகுத்துவிட்டோம்; வருமானத்தை அதிகரிக்க, செல்வத்தைப் பெருக்க, உற்பத்தியை மிகுதியாக்கஉங்கள்உழைப்பை மட்டும் தாருங்கள்—ஒத்துழையுங்கள், திட்டங்கள் நிறைவேற; பிறகு பாருங்கள், நிலையை'—என்று, ஆட்சிப் பீடத்தில் அமர்ந்திருக்கும் ஆளவந்தார்கள், கூருத நாளில்லை!

ஐந்தாண்டுத் திட்டம்—இது முதலாவது—இரண்டாயிரம் கோடி செலவிடுகிறோம்; பலநோக்கு நதிப் பள்ளத்தாக்குத் திட்டங்கள், தொழிற்சாலைகள், அணைக்கட்டுகள், கல்விக்கூடங்கள், ஆராய்ச்சி நிலையங்கள், பயிற்சி முகாம்கள், சமூக சேவை அரங்குகள், நிர்மாண ஊழியர் அணிவகுப்புகள்—அப்பப்பா, இத்தனையும் 'சுதந்திரத்'தின் சாதனைகள்; இவைதான் எனது 'புண்ணிய க்ஷேத்திரங்கள்' — 'யாத்திரை ஸ்தலங்கள்'—என்று பூரிப்புடன் பேசுகின்றனர், அரசோச்சும் அமைச்சர்கள்!

இத்தனைக்கும் பிறகும் நிலை என்ன? திட்டங்கள் தந்த பலன் என்ன? மக்கள் பெற்ற முன்னேற்றம் என்ன?—என்று கேட்டாலோ, வேதனை மிகுந்த பதில்தான் கிடைக்கிறது!

'முதல் திட்டத்தினை, இரண்டாயிரத்திற்கும் அதிகமான கோடி ரூபாய் செலவில் நிறைவேற்றி வைத்தபின், வேலையில்லாத் திண்டாட்டம் என்ற கொடுமை மக்களிடமிருந்து எத்தனை தூரம் துரத்தப்பட்டது?'—என்று அறிய விசாரணை நடத்தினர்கள்—திட்டத்தின் கர்த்தாக்கள்.

'திட்டம் துவக்கப்படுமுன் இருந்ததைவிட திண்டாட்டம் அதிகரித்திருக்கிறது'—என்ற உண்மையைத்தான் கூறிற்று, விசாரணை!

இரண்டாம் திட்டத்தில், பல ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் செலவிட உத்தேசம் கொண்டிருக்கின்றனர், ஆளவந்தார்கள்! இது என்ன பலனைத் தருமோ?

'ஒரு கோடிப் பேருக்கு வேலை கிடைக்கும்' என்கிறார்கள்—புள்ளிவிவரங்களைக் காட்டி! அது பொறுத்திருந்து அறியவேண்டிய ஒன்று!

ஆட்சியாளர்கள், பலகோடி பெறுமான இரண்டாம் திட்டத்திற்கு முழுவடிவம் தருவதில் தீவிரமாக ஈடுபட்டிருக்கும் இந்த நேரத்தில், நாம் ஒன்றை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

1954 செப்டம்பர் 31ந் தேதி முதல், 1955 ஆகஸ்டு இறுதி வரை இந்தியா முழுமையிலுமாக 15 இலட்சத்திற்கும் அதிகமானோர் வேலை கோரி பெயர்களைப் பதிவு செய்திருக்கின்றனராம், சர்க்காரிடத்தில்! இதனை சர்க்கார் கருத்தில் கொள்ள வேண்டுமென்பதே நாம் சுட்டிக்காட்ட விரும்புவது.

வேலை தேடித்தரும் நிறுவனங்கள் பெரும்பாலும் மாவட்டத் தலைநகர்களிலேயே இருப்பவை; அங்கு பெயர் பதிவு செய்திருப்போரில் மிகப் பெரும்பாலானோர் படித்தவர்கள்; இதையும், இவர்களன்றி இலட்சக்கணக்கான கல்வி அறிவு பெற்றில்லாத தொழிலாளர் விவசாயப் பாட்டாளி மக்கள் வேலையின்றித் தவிப்பதையும் கணக்கெடுத்து, கருத்திலிறுத்தியாக வேண்டும், காரியமாற்ற முற்படுவோர்—கோடிக்கணக்கில் செலவிடுமுன்!

புரட்சித் தலைவி திருமதி சன்-யாட்-சென்

வீரம்செறிந்த வாழ்க்கை வரலாறு

புதுடில்லி, டிச. 17—

சீன மக்கள் குடியரசின் தேசிய மக்கள் காங்கிரஸ் நிறுவனத்தின் நிரந்தரக் குழுத் தலைவர் தோழியர் சுங்-சிங்-லிங் (திருமதி சன்-யாட்-சென்) நேற்று டில்லி வந்து சேர்ந்தார்.

திருமதி சன்-யாட்-சென், 19-ம் நூற்றாண்டின் இறுதியில் பிறந்தார். அவர் டாக்டர் சன்-யாட்-சென்னின் காரியதரிசியாகப் பொறுப்பேற்றது முதல் அவரது 'புரட்சி வாழ்க்கை' துவங்கிற்று.

1915-ல் அவர் டாக்டர் சன்-யாட்-சென்னை திருமணம் செய்துகொண்டார். 1921-ல் காண்டன் நகரில் குண்டுவீசி சன்-யாட்-சென்னைக் கொலை செய்ய முயற்சி நடந்தபோது, துப்பாக்கிப் பிரயோகம் செய்தவர்களது கவனத்தைத் தம்மீது திருப்பி, டாக்டர் சென் தப்புவதற்கு அவர் வழி செய்தார்.

1925ல், டாக்டர் சன்-யாட்-சென் இயற்கை எய்திய பின்பு, சீனப் புரட்சியில் தீவிரப் பங்கேற்றார்.

1927ல், நான்சங்கில் நடந்த கிளர்ச்சிக்கு அவர் ஆதரவளித்தார். ஆனால், கடைசியாக அவர்நாட்டை விட்டு வெளியேற நேர்ந்தது; அவர் மாஸ்கோவுக்கும், ஐரோப்பாவில் பல இடங்களுக்கும் சென்றார்; அங்கெல்லாம் அவர் பல மாநாடுகளில் கலந்துகொண்டார்.

1931-ல், அவர் சீனாவுக்குத் திரும்பிவந்த பின், உள்நாட்டுக் கலகத்தை நிறுத்தி, ஜப்பானுக்கு எதிராக ஐக்கிய முனையை ஏற்படுத்த வேண்டுமென்று கம்யூனிஸ்டுக் கட்சி தெரிவித்த கொள்கைக்கு ஆதரவளித்தார். ஜப்பான் வடகிழக்குச் சீனாவை ஆக்கிரமித்து, ஷாங்காய் நகரில் குண்டு வீசியதற்கு எதிர்ப்புக் காட்டாமல், சியாங்-கே-ஷேக் ஜப்பானியருக்கு விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையைக் கையாண்டதை அவர் தீவிரமாக எதிர்த்து வந்தார்.

1937-ல் அவர் ஜப்பானிய ஆக்கிரமிப்புக்கு எதிராக சீன மக்கள் நடத்திய எதிர்ப்பு யுத்தத்தை உற்சாகத்துடன் எதிர்த்தார்.

1938-ல் அவர் சீனத் தற்காப்பு லீகை ஆரம்பித்து, யுத்த கால வைத்திய சேவையிலும், பாலர் பள்ளிக்கூடப் பணியிலும் ஈடுபட்டிருந்தார்; சீனக் கம்யூனிஸ்டுக் கட்சியின் தலைமையில் இருந்த விடுவிக்கப்பட்ட பிரதேசங்களுக்கும், ஜப்பானுக்கு எதிராகப் போராடிய சேனைக்கும் மருத்துவ சாதனங்களைக் கொண்டு சேர்ப்பதற்குப் பெரும் முயற்சி எடுத்துக்கொண்டார்.

சீன மக்கள் முன்னேற்ற இலட்சியத்துக்கு அவர் செய்துள்ள சேவையை முன்னிட்டு அவர் 1949-ல் சீன மக்கள் குடியரசின் மத்திய மக்கள் சர்க்காரின் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

1950-ல், ஸ்டாலின் சர்வதேச சமாதான பரிசைப் பெற்றவர்களில் அவரும் ஒருவர்.

'தாயகம்' என்று பேசக்கூடாதாம்!

'ஒற்றுமை'க்கு உலை வைக்குமென ஓலம்!

மூட்டி மோதிக்கொள்ளும் வடநாட்டவர் உபதேசம் புரியும் விசித்திரம்!

புதுடில்லி, டிச. 16—

மாநிலப் புது அமைப்புத் திட்டம் பற்றிய விவாதத்தின்போது மக்கள் சபையில் பேசிய வடநாட்டவர் அனைவரும், சில சிக்கல்களில் தங்களுக்குள்ளாக அடித்துக்கொண்டாலும், இந்தியாவின் 'ஒற்றுமை', 'ஐக்கியம்', 'பாதுகாப்பு' இவை பாதிக்கப்படக்கூடாது என்று பேசுவதில் மட்டும் ஒன்றுபட்டு நின்றிருந்திருக்கின்றனர்.

'தாயகம்' என்று தங்கள் தங்கள் மொழி வட்டங்களை அழைப்பதே பெருந்தவறு என்றும், உலகமே ஒன்றுபட்டு, ஒரேவகைக் குடி உரிமை பெற்று, ஒரே அரசாங்கத்தின்கீழ் வாழவேண்டும் என்று பேசப்படும் நாளில் 'தாயகம்' என்று பேசுவது காலத்திற்கு ஒவ்வாது என்றும் சில பிரகஸ்பதி'கள் பேசினராம்!

மொழிவழியாக மாநிலங்கள் அமைவது இந்தியாவின் ஒற்றுமைக்கு உலைவைப்பதாகும் என்றும் சிலர் ஓலமிட்டிருக்கின்றனர்.

அதேபோது, மொழிவழி மாநிலங்கள் அமைவது, ஒற்றுமையைக் குலைக்காது—மாறாக, ஒற்றுமையை வளர்க்கும் என்றும் சிலர் இடித்துக் கூறியிருக்கின்றனர்.

பம்பாய், பஞ்சாப் ஆகிய இரு மாநில அமைப்புகள் குறித்து, ஆதரிப்போரும் எதிர்ப்போருமாக தீவிரமாகப் பேசியிருக்கின்றனர்.

'தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தமிழகத்துடன் இணைய வேண்டும்' என்று, பற்பல சான்றுகளைக் காட்டி தோழர் ஏ. நேசமணி வாதிட்டிருக்கிறார்.

'இந்தப் பகுதிகள், மதுரையிலிருந்து ஆட்சி செலுத்திய பாண்டிய மன்னர்களின் ஆளுகைக்கு உட்பட்டிருந்தன' என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்

'இந்தப் பகுதியில் வாழும் மக்கள்—குறிப்பாகத் தாழ்த்தப்பட்டவர்கள், திரு-கொச்சி சர்க்காரின் ஆட்சியில் திருப்தி கொண்டவர்களாக இல்லை என்பதாலும், இந்தப் பகுதிவாழ் மக்கள் அனைவரும் பன்முறையும் தாங்கள் தமிழகத்துடன் சேர்ந்துதான் வாழ்வோமெனத் தெரிவித்திருப்பதாலும் இவை தமிழகத்தில் சேர்க்கப்பட வேண்டும்' என்றும் அவர் வலியுறுத்தியிருக்கிறார்.

கேரள உறுப்பினர்கள் சிலர் இந்தக் கோரிக்கையை மூர்த்தண்யமாக எதிர்த்திருக்கின்றனர்.

பம்பாய் பற்றி பேசிய பம்பாய்ப் பகுதி காங்கிரஸ் தலைவராயுமுள்ள எஸ். கே. பட்டீல், பம்பாய் நகரம் மட்டும்தான், இந்தியாவிலேயே மதச் சார்பற்ற ஒரு இடத்திற்கு இலக்கணமாய் அமைந்திருப்பதாயும், தொடர்ந்து அது அப்படி இயங்க அனுமதிக்க வேண்டுவது அவசியம் என்றும் பசப்பு மொழிகளால் மராட்டியரை ஏமாற்ற நினைத்து, நீண்ட நேரம் பேசியிருக்கிறார்.

அவர், ஒன்று, பம்பாய் தனி மாநிலமாக இருக்கவேண்டும் என்றும், அல்லது மாநிலக் குழு கூறியுள்ளபடி குஜராத்தியர் வசம் இருக்கவேண்டும் என்றும், எந்தக் காரணத்தாலும் மராட்டியர் வசம் பம்பாய் இருக்கக்கூடாது என்றும் பேசியிருக்கிறார்.

இவரது சூது நிறைந்த பேச்சுக்கு சுவாமி இராமானந்ததீர்த்தா நல்ல சூடு கொடுத்திருக்கிறார். 'பம்பாய் மராட்டியருக்குக் கிடைக்க வேண்டுவதே நியாயம்' என்று முழக்கமிட்டிருக்கிறார்.

அவர்தான், 'மொழிவழியில் மாநிலம் அமைவது, ஒற்றுமைக்கு ஆபத்து' என்று ஓலமிடுவோருக்குச் சாட்டையடியும் தந்திருக்கிறார். 'மொழிவழி மாநிலங்கள், இந்தியாவின் ஒற்றுமையை வளர்க்க உதவக்கூடியன' என்று எடுத்துக்காட்டினார் அவர்.

மற்றும் பலரும் மேற்கு வங்கம், பீகார், ஆந்திரம், கர்நாடகம் பற்றிய சிக்கல்கள் குறித்தும் பேசினர்.

எகிப்தின் புதிய அரசியல் சட்டம்

ஜனவரியில் பிரகடனமாகுமாம்

"வரும் 1956-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 16-ம் நாளன்று எகிப்தின் புதிய குடியரசு அரசியல் சட்டம் பிரகடனப்படுத்தப்படும்."

என்று, தேசிய வழிகாட்டித்துறை அமைச்சர் பதே ரத்வான் அறிவித்திருக்கிறார்.

ஜூலை 23-ந் தேதிய புரட்சியின் கொள்கைகளை உள்ளடக்கியதாக அந்த அரசியல் சட்டம் இருக்கும் என்றும், பாண்டுங் மாநாட்டில் வகுக்கப்பட்ட கொள்கைகளின் அடிப்படையில் எகிப்தின் வெளிவிவகாரக் கொள்கைகள் நிர்ணயிக்கப்படும் என்றும், அவர் பத்திரிகையாளரிடம் தெரிவித்திருக்கிறார்.

அரசியல் சட்டத்தில், எகிப்திய மக்களின் உரிமைகள் பற்றிய விதிமுறைகளும் இடம் பெறுமாம்.

தேர்தல் விதிகள் பற்றி, அரசியல் சட்ட பிரகடனத்தன்று எதுவும் அறிவிக்கப்படாது என்றும், ஆனால், விரைவிலேயே அவை பற்றிய விதிகளும், முறைகளும் தயாரிக்கப்பட்டு வெளியிடப்படும் என்றும் கூறப்படுகிறது.

புதிய மக்கள் சபை கூடுவதற்கான நாளும் இன்னும் குறிக்கப்படவில்லை.

இலங்கையிலிருந்து வெளியேறியவர்கள்

புதுடில்லி, டிச. 15—

"1955 ஜனவரி 1-ந் தேதி முதல் 1955 நவம்பர் 19-ந் தேதி வரையில் 16,983 இலங்கைவாழ் இந்தியருக்கு வெளியேற்ற 'நோட்டீஸ்' தரப்பட்டது; 'நோட்டீஸ்' தரப்பட்ட 4,895 பேர் உட்பட 15,392 இந்தியர்கள் அந்தக் கால அளவில் வெளியேறி இந்தியாவுக்கு வந்திருக்கிறார்கள்"

என்று, மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்விகளுக்குப் பிரதமர் நேரு எழுத்துமூலமாகப் பதிலளிக்கையில் தெரிவித்துள்ளார்.

புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு இலவசமாக அரிசி வழங்க ஏற்பாடு

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலும் தோழர்களின் தளரா முயற்சி

புயலாலும், பெரு வெள்ளத்தாலும் பாதிக்கப்பட்ட பிரதேச மக்களுக்கு இலவசமாக அரிசி வழங்குவதற்காக இந்திய சர்க்கார் மத்திய கையிருப்பிலிருந்து 2,000 டன் அரிசி ஒதுக்கி வைத்திருக்கின்றனராம்! இதன் விலையை மத்திய சர்க்காரும், மாநில சர்க்காரும் சேர்ந்து ஏற்றுக்கொள்ளுவார்களாம்!

தமிழ் நாட்டின் பல பகுதிகளில், எல்லாக் கட்சிகளையும் சேர்ந்த நிவாரண நிதிக் குழுக்கள் அமைக்கப்பட்டு, சீரிய முறையில் செயலாற்றப்படுகிறது. விவரங்கள் இங்கு தரப்படுகிறது:—

லால்குடி:

10—12—55ல் லால்குடி இந்திய யுவர் சங்கக் கட்டிடத்தில் திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் அன்பில்-தர்மலிங்கம் தலைமையில் சர்வ கட்சி அமைப்புக் கூட்டம் நடைபெற்றபோது, தோழர்கள் அன்பில்-தருமலிங்கம் (தி. மு க.), ப. மருதை முத்துமுத்துராஜா (காங்.), எல். எம். தங்கராசன் (தி. மு க.), எல். கே. காத்த பெருமான் (காங்), எல். என். பரமசிவம் (தி. மு. க), ஓ ஆறுமுக முதலியார் (காங்), எல். டி கந்தசாமி (தி. மு. க), எல். பி. தங்கவேல் (தி. மு க), எல் ஆர். இராசகோபால், மற்றும் 8 பேர் கொண்ட நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாதிக்கப்பட்ட, திருச்சி, தஞ்சை, மதுரை, இராமனுதபுரம் மாவட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், நிவாரணம் அளிக்க லால்குடியில் அரிசி, நெல், துணிகள், மற்றும் தேவைப்படும் பொருள்களை வசூலிப்பதென்றும், வசூலிக்கப்பட்ட பொருள்களை திருச்சி மாவட்ட கலெக்டர் அவர்கள் மூலமாக அந்தந்தப் பகுதிகளுக்கு அனுப்புவதென்றும், முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

கோவை—இராமநாதபுரம்

கோவையை அடுத்துள்ள இராமநாதபுரத்தில் (4-வது வார்டு) 14—12—55ல், வள்ளுவர் படிப்பகத்தில் நடைபெற்ற சர்வக் கட்சி கூட்டத்தில் 25 பேர்கொண்ட புயல் நிவாரணக் குழு நிறுவப்பட்டது.

குழுவின் தலைவராக தோழர் ஆர். ஜி. சின்னசாமி, செயலாளராக திரு. மா. சோமசுந்திரம், பொருளாளராக திரு. ஆர். பி சுப்பிரமணியம் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தி. மு. கழகச் சார்பில் தோழர்கள் ப இராமலிங்கம், வெ. பேச்சிமுத்து, திரு. நாகரத்தினம் ஆகியோர் கலந்து கொண்டனர். குழுவில், தி. மு. கழகச் சார்பில் தோழர் ஆர். கே. சடையப்பன் இடம் பெற்றுள்ளார். தினமும் காலையில் 8 மணியிலிருந்து 10 மணி வரையிலும், மாலை 7 மணியிலிருந்து 9 மணி வரையிலும் சுமார் 1 வாரத்திற்குள் 4-வது வார்டு முழுதும் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று வசூல் செய்வதென முடிவு செய்யப்பட்டது.

அண்ணாமலைநகர்

மாணவர்கள் முயற்சி

புயல் நிவாரணத்துக்காக உணவு விடுதி மாணவர்கள் ஒவ்வொருவரிடமும் 0—8—0 வீதம் வசூலித்து ரூ. 800 சேர்த்து அனுப்பப்பட்டுள்ளது. மாணவர்களிடையே சட்டை, வேட்டி, சேலை, ரவிக்கை முதலியன சேர்க்கப்பட்டு மொத்தம் 1,600-க்கு மேற்பட்ட உருப்படிகள் அனுப்பப்பட்டுள்ளது. ஒரே இரவில் அவ்வளவு உருப்படிகளும் சேர்க்கப்பட்டது. ஆசிரியர் அனந்தராமன், மற்றும் தோழர்கள் சௌந்திரராசன், வீரமணி, மாணிக்கம், இராமநாதன் முதலிய மாணவர்கள் பெரும் பங்கெடுத்து உழைத்தனர். கழகத் தோழர் மாணிக்கம், பாராட்டத்தக்கவகையில் உழைத்தார்.

மற்றும் சமூகப் பணிக் குழு சார்பில் தில்லை நகரில் சுமார் 2,500 உருப்படித் துணிகள் சேர்க்கப்பட்டு அனுப்பப்பட்டுள்ளது.

சென்னை — மவுண்ட்ரோடு நடைபாதை வியாபாரிகள்:

தோழர்கள நாஞ்சில்-பெ. வைரவன், அபிராமம், எம் ஏ. முகம்மதலி ஆகியோர் முயற்சியால் ரூ 22-6-9 திரட்டப்பட்டு நிவாரண நிதிக்கு அனுப்பப்பட்டது

அயனாவரம்—சென்னை:

உறவின்முறை நாடார்கள் சங்க அவசரக் கூட்டம் 11—12—55ல் நடைபெற்றபோது, நிவாரண நிதி திரட்டி அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. 12-ந் தேதியிலிருந்து 14-ந் தேதி வரையில் தோழர்கள் மு காசி, சி. தங்கசாமி, வ. தங்கசாமி, பே. குருசாமி, க. பெருமாள் ஆகியோர் திரட்டிய தொகை மொத்தம் ரூ. 551-8-9; செலவு ரூ. 15-2-6; மீதி ரூ. 536-6-3 அனுப்பப்பட்டுள்ளது.

திருப்பத்தூர் (வ, ஆ.)

9-12-55ல், திரு கே. ஜி. நாகராசனுர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் புயல் நிவாரண நிதி குழு அமைக்கப்பட்டது. தலைவர்: டி. தாமோதரனுர்; துணைத் தலைவர்: டி. கே. கோவிந்தசாமி; செயலாளர்: கே. நெடுஞ்சோழன்; துணைச் செயலாளர்: ஏ. சத்தார் சாயபு; பொருளாளர்: கே. ஏ. எஸ். பத்மநாபன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

வசூலாகியுள்ள ரூ. 3 001-ம் முதலமைச்சருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இன்னும் வசூலாகும் பணத்தையும், துணிகளையும், அரிசி மூட்டைகளையும் விரைவில் அனுப்பிவைக்கப்படும்.

சித்தூர் மாவட்டம்—புதுப்பேட்டை:

இப்பகுதி கிராம நெசவுத் தொழிலாளர்கள் 122 வேட்டிகளை வசூலித்து அனுப்பியுள்ளனர்.

சிதம்பரம்:

11—12—55 காலை 8 மணியளவில் சிதம்பரம் திரு வி க. படிப்பகத்திலிருந்து நிவாரண நிதி வசூல் செய்ய புறப்பட்ட ஊர்வலத்தில் பல கட்சியினரும், மன்றங்களும், படிப்பகங்களும் கலந்து கொண்டன

11, 12-ந் தேதிகளில் 6½ மூட்டை அரிசியும், 5,000 துணி உருப்படிகளும், ரூ. 245-ம் திரட்டினர்.

13—12—55ல், ரூ. 250, 55 புதிய துணி உருப்படிகள் திரட்டினர்.

தொழிலாளர் எண்ணிக்கை

7 கோடியைத் தாண்டிவிட்டதாம்

1955-ம் ஆண்டின் மூன்றுவது மூன்று மாதங்களில் அமெரிக்கத் தொழிலாளர்களின் எண்ணிக்கை முதன் முதலாக 7 கோடியைத் தாண்டியுள்ளதாம்!

அதுவும் வடநாட்டில்தான்

புதுடில்லி, டிச. 16—

ரூர்காலாவில் உருக்குத் தொழிற்சாலையின் துணைப் பகுதியாக இரசாயன உரத் தொழிற்சாலை ஒன்றையும் இந்திய சர்க்கார் ஏற்படுத்த உத்தேசித்திருக்கிறார்கள் என்று மக்கள் சபையில் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

செங்கற்பட்டில் பொதுச்செயலாளர்

மாநில மாநாட்டுக்கு நிதி அளிப்பு

11—12—55ல், செங்கற்பட்டு தர்க்கா திடலில், தி. மு கழகச் சார்பில், செங்கற்பட்டு மாவட்டச் செயலாளர் தோழர் கே. டி. எஸ். மணி தலைமையில் மாநில மாநாட்டு நிதி அளிப்புக் கூட்டம் நடைபெற்றது.

நிதிக்காக செங்கற்பட்டு தி. மு. கழகச் சார்பில் ரூ. 57; தென் பகுதி இரயில்வே மென் யூனியன் சார்பில் ரூ 25; திருமணி ஆரோக்கிய விடுதியில் சிகிச்சைபெறும் கழக அனுதாபத் தோழர்கள் சார்பில் ரூ 18; திருக்கழுக்குன்றம் தி. மு. கழகச் சார்பில் ரூ. 10—ஆக ரூ. 110-ம், மாவட்டச் செயலாளர் கே. டி. எஸ் மணி மூலமாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

பின்னர் கூட்டத்தில், தமிழகத்தில் ஏற்பட்ட மழை—புயல் கொடுமையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபமும், திருச்சி பேராசிரியர் இருதயராஜ் அவர்கள் மறைவுக்கு அனுதாபமும் தெரிவித்துக் கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பின்னர், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் 'திராவிடம் ஏன் பிரியவேண்டும்' என்பது பற்றி விரிவுரையாற்றினுர்.

செய்திச் சுருள்

★

பெங்களூர் திராவிடமாணவ முன்னேற்றக் கழகம்

11—12—55-ல், பெங்களூர் வட்ட திராவிட மாணவ முன்னேற்றக் கழக அமைப்புக் கூட்டம், மாவட்ட தி. மு. க. செயலாளர் எஸ் வி பதி அவர்கள் தலைமையில் பெங்களூர் கப்பன் பார்க்கில் நடைபெற்றது. பல கல்லூரி, உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், கிளைக் கழகத் தோழர்களும் திரளாக வந்திருந்தனர். மாணவத் தோழர்களை அமைப்புக் குழு உறுப்பினர் வி. கிருஷ்ணமூர்த்தி வரவேற்றுர். மாணவர் கழகத்தை துவக்கிவைத்துத் தோழர் சி. பி. சிற்றரசு பேசுகையில், மாணவர் கழகத்தின் அவசியத்தையும், தாய்க் கழகத்துடன் எத்தகைய தொடர்பு மாணவர்கள் கொண்டிருக்கவேண்டும் என்பது குறித்தும் குறிப்பிட்டார். அரசினர் சட்டக் கல்லூரி, சென்டரல் கல்லூரி, இண்டர்மீடியட் கல்லூரி, ராஜா ஆக்குபேஷனல் இன்ஸ்டிடியூட், கார்ப்பரேஷன் உயர்நிலைப் பள்ளி, செயின்ட் ஜோசப் உயர்நிலைப்பள்ளி ஆகியவைகளின் இருபது பிரதிநிதிகள் கொண்ட மத்திய கமிட்டி ஒன்று அமைத்து ஆங்காங்கு கிளைக் கழகங்கள் துவங்குவதெனவும் முடிவு செய்யப்பட்டது.

கோவில்பட்டி லட்சுமி மில் காலனி தேர்தல்

தி. மு. கழகத் தோழர் வெற்றி!

கோவில்பட்டி, டிச. 13—

மேற்படி மில் காலனி கமிட்டிக்கு தொழிலாளர்கள் சார்பில் ஏற்பட்ட இரண்டு இடங்களுக்கு நடைபெற்ற தேர்தலில், தி. மு கழகத் தோழர் என். இராமசாமியும், கம்யூனிஸ்டுத் தோழர் வெங்கடசாமியும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

கோவை மறுமலர்ச்சி மன்றம்

6—12—55ல், மன்றப் பணிமனையில் திரு தி ச. அப்பர்சாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் செயலாளராகத் திரு மா. மாணிக்கமும் துணைச்செயலாளராகத் திரு. வடிவேலுவும், பொருளாளராகத் திரு. வெள்ளியங்கிரியும், எழுவர் கொண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

கோவை வட்டத்தில் என். வி. நடராசன்

பெருந்துறை:

9—12—55 மாலை 7 மணிக்கு, பெருந்துறை பழைய ஸ்டோர் மைதானத்தில் தி. மு கழக முதலாண்டு நிறைவு விழாப் பொதுக்கூட்டம் தோழர் எஸ். அப்பாவு தலைமையில் நடைபெற்றது.

குன்னுத்தூர் தோழர் அன்பரசு கழகக் கொள்கைகள் குறித்துப் பேசியபின், தோழர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகள் குறித்தும், புயல் கொடுமை குறித்தும் விரிவுரையாற்றினுர்.

ஈரோடு:

10—12—55 மாலை 7 மணிக்கு, ஈரோட்டில் ஜின்னு மைதானத்தில் தோழர் எம். சின்னப்பன் தலைமையில் தி.மு கழகப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர் எஸ் அப்பாவு பேசியபின், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் கழகக் கொள்கைகள் குறித்துப் பேசினுர்.

கோபி:

11—12—55 மாலை 7 மணிக்கு, கோபி பெரியார் திடலில், தோழர் ஷெரீப் தலைமையில் தி. மு. கழகப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் எஸ். அப்பாவு, வெங்கடாசலம் பேசியபின், தோழர் என். வி. நடராசன் அவர்கள் தி. மு கழகக் கொள்கைகள் குறித்து உணர்ச்சிமிக்க சொற்பொழிவாற்றினுர்.

காங்கேயநல்லூரில் மு. கருணாநிதி

மாநில மாநாட்டு நிதியளிப்பு

10—12—55ல், காங்கேயநல்லூர் தி. மு கழக மூன்றுவது ஆண்டு விழா தோழர் எம். கந்தசாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் மு. கருணாநிதி அவர்கள் சொற்பொழிவாற்றினுர்.

அதுபோது, மாநில மாநாட்டு நிதிக்காக காங்கேயநல்லூர் தி. மு. கழகம் ரூ 21; விருதம்பட்டு தி. மு. கழகம் ரூ 20; கழிஞ்சூர் தி. மு. கழகம் 20—ஆக ரூ. 61-ம் தோழர் மு கருணாநிதியிடம் தரப்பட்டது.

தோழர் கருணாநிதி அவர்களுக்கு திருக்குறள் மன்றத்தரால் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது.

இளங்கோ வீதியில் தோழர் கருணாநிதி அவர்களால் கொடியேற்றுவிக்கப்பட்டது.

விளைச்சல் குறைவுக்குக் காரணம் என்ன?

சத்தற்ற நிலங்களில் விவசாயிகள் உழுது பயிரிடுவதால் காணும் பலன்?

'பரம்பரைப் பிரச்சினை'யில் தீர்வு காண்பதற்கு வானொலி மூலம் மத்திய அமைச்சர் தகவல் தருகிருர்

"ஏக்கராவுக்கான விளைச்சல் மிகக் குறைவாக இருப்பது இந்திய விவசாயத்தில் பரம்பரைப் பிரச்சினையாக ஆகிவிட்டது. இத்துடன் வறுமையும், பரம்பரையாக வந்துவிட்டதும் இயற்கையே.

கோளாறுன பருவ நிலை, இயற்கையுடன், நமது விவசாயம் போராட வேண்டியிருக்கிறது என்பது உண்மைதான்; ஆனல், பெரிய உப-கண்டம் போன்ற நம் நாட்டில் வரட்சியும், பெரு வெள்ளமும் மாறிமாறி ஏற்படுவது தடுக்க முடியாத செயல்களாக இருக்கின்றன; சில சமயங்களில் இவ்விரு தொல்லைகளால் ஒரே பிரதேசங்கள் தொடர்ந்து பாதிக்கப்படுவதும் உண்டு."

—இவ்வாறு, மத்திய சர்க்கார் விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப் ராவ் தேஷ்மூக், 'நாட்டின் மக்கள் தொகை உயர்வுக்கேற்ற வகையில் இந்தியா உணவு தானியங்களை அதிக அளவில் உற்பத்தி செய்து வரவேண்டும்' என்று கேட்டுக்கொண்டு, டில்லி அ இ. வானொலி மூலம் பேசுகையில் குறிப்பிட்டுவிட்டு, மேலும் சொன்னுர்:—

சத்தற்ற நிலங்கள்

"இந்நாட்டு விளைச்சல்கள் குறைவாக இருப்பதற்கான காரணங்களில் மிகவும் முக்கியமானது, சத்தற்ற நிலங்களில் விவசாயிகள் பயிரிட வேண்டியிருப்பதுதான். சென்ற மூன்று ஆண்டுகளில் உரங்களைச் சேர்த்து வைத்து உபயோகப்படுத்துவதிலும், கழிவு நீரை நிலத்துக்குப்பாய்ச்சுவதிலும், குப்பை எரு உற்பத்தியை அதிகப்படுத்துவதிலும், இதர எரு வகைகளைப் போடும்படி செய்வதிலும் நாம் எவ்வளவோ முன்னேற்றமடைந்திருந்தபோதிலுங்கூட, நாம் நிலத்திலிருந்து எடுத்துள்ளதும், எடுத்து வருவதுமான சத்தை மறுபடியும் அதில் போட்டுச் சரிக்கட்டுவதற்கு இன்னும் எவ்வளவோ செய்ய வேண்டியதிருக்கிறது. நூற்றுண்டு காலமாக நாம் சாகுபடிக்கு மேல் சாகுபடி அதே நிலத்தில் செய்துவந்தபோதிலும், அது நம்மை எப்பொழுதும் அடியோடு கைவிட்டதில்லை; எனினும், நிலம் இழந்த சத்தைத் மீண்டும் அடையும்படி செய்வதில் நாம் போதிய அளவு முன்னேறவில்லை.

"இதன் பலனுக நமது சராசரி விளைச்சல்கள் படிப்படியாகக் குறைந்துகொண்டு வந்தன; குறைந்த அளவு உற்பத்தியுடன் நாம் திருப்தியடைய வேண்டியவர்களானேம். கண்டுமுதல் இவ்வாறு குறைவாக இருப்பதை சமாளிப்பதற்கு ஒரு வழி, விவசாயிகள், கிடைக்கும் இயற்கை உரத்தையும், செயற்கை உரத்தையும் சரியான அளவில் நிலபுலங்களுக்குப் போட்டுச் சாகுபடி செய்வதேயாகும்."

விளம்பரம் செய்வதற்கு ரூ. 8,08,140 செலவு

புதுடில்லி, டிச. 15—

உல்லாசப் பிரயாணப் போக்குவரத்து சம்மந்தமான விளம்பரங்களுக்காக போக்குவரத்து மந்திரி காரியாலயம் 1954—55-ம் ஆண்டில் மொத்தம் ரூ 8,08,140 செலவழித்ததாக மாநிலங்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிறப்பு

சென்னை (6-வது வட்டம்) வியாசர்பாடி தி மு. கழகச் செயலாளர் தோழர் அ சண்முகவேல் அவர்களின் துணைவியார் தோழியர் செல்வம்அம்மையார் 1-12-55 அன்று, ஓர் பெண் மகவுக்குத் தாயானுர் இதன் நினைவாக, 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ. 1 அன்பளிப்பு தரப்பட்டது. வரப்பெற்றோம் — நன்றி — பொறுப்பாளர்.

மறைவு—அனுதாபம்

கும்பகோணம் தி. மு. கழகத் தோழர் வி. பராங்குசம் அவர்களின் அன்னையார் இயற்கையெய்தியமை குறித்து, நகர தி. மு. கழகச் சார்பில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்படுகிறது.

சேதமுற்ற பகுதிகளில் மீண்டும் காமராசர் சுற்றுப்பயணம்

பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவ மத்திய மந்திரியின் வேண்டுகோள்

நிவாரணம் தருவதில் தமிழகத்தின் கடமை உணர்வு

★

சென்னை—

“புயலின் விளைவுகள் மிகக் கடுமையானவையாயிருக்கின்றன; ஏற்பட்ட சேதங்கள் மிக அதிகமானவை.

“பல தலைமுறைகளாக வளர்ந்துள்ள பெரும் மரங்கள் எல்லாம் விழ்ந்துபட்டுள்ளன. கடற்கரை வட்டங்களில் மக்களுக்கு வருமானம் தந்துகொண்டிருந்த ஏராளமான தென்னை மரங்கள் விழ்ந்துவிட்டன; பாதிக்கப்பட்ட பகுதிகளில் எண்ணற்ற விடுகள் பாழாகிவிட்டன; பல கிராமங்களில் கோவிலைத் தவிர வேறு விடுகள் எதுவும் தப்பக் காணேம்.

“மத்தியதர வர்க்கத்தினரும் மிகவும் பாதிக்கப்பட்டுவிட்டனர்.

“ஏழை எளிய மக்கள், தங்களுக்கிருந்த சிறுசிறு குடிசை விடுகளையும் இழந்து தவிக்கின்றனர்.

“விழ்ந்த மரங்களை வெட்டுவதிலும், உடைந்த பாதைகளைச் செப்பனிடுவதிலும், இடிந்த விடுகளைத் திரும்ப எழுப்புவதிலும் மக்கள் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

“ஏழை, எளிய மக்கள் சர்க்கார் உதவியுடன் தங்கள் விடுகளைத் திரும்பக் கட்டிக்கொள்ள முடியும். நடுத்தர மக்கள் பலர் தங்கள் விடுவாசல், தென்னை மரங்கள் போன்ற சொத்துக்களை எல்லாம் இழந்து தவிக்கின்றனர். அவர்கள்தான் மிகக் கஷ்டப்படுகின்றனர். சர்க்கார் திறக்கக்கூடிய கஞ்சித் தொட்டிகளை ஏழை எளியோர் பயன்படுத்திக்கொள்ள முடியும்; ஆனால், மத்தியதர வர்க்கத்தினர், சமுதாயத்தில் தங்களுக்கிருக்கும் அந்தஸ்து (!) காரணமாக, இவற்றைப் பயன்படுத்த முடியாது; எனவே, இவர்களுக்கு விடுகள் கட்டிக்கொள்ளவும், தங்கள் சொத்துக்களையும், நிலங்களையும் சரிசெய்துகொள்ளவும் சர்க்கார் கடன் தந்து உதவ வேண்டுவது மிக அவசியமாகும்”

—என்று, புயல், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுப் பயணம் செய்த மத்திய சர்க்கார் உணவுத் துறை துணை அமைச்சர் எம். பி. கிருஷ்ணப்பா குறிப்பிட்டிருக்கிறார்.

தஞ்சை, இராமநாதபுரம், மதுரை, திருச்சி மாவட்டங்களில் இயற்கையின் கொடுமையால் விளைந்த சேதங்கள்பற்றி இன்னும் முழு விவரங்கள் கிடைத்தபாடில்லை.

நிவாரண வேலைகளில் சர்க்காரும், பல பொது நிறுவனங்களும், தனிப்பட்டவர்களும் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

மீண்டும் முதலமைச்சர் காமராசர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இராமநாதபுரம் மாவட்டத்தில், திருவாடானை வட்டத்தில் அவதியுறும் மக்களின் நிலையறிய அந்தப் பகுதிகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருக்கிறார்.

சென்னையிலிருந்து சென்ற ‘இராமகிருஷ்ண மடத்’து ஊழியர்கள், பாதிக்கப்பட்ட பகுதிகளில் சிறப்புறும் சேவை செய்து வருகின்றனர்.

மாநிலமெங்கணும் நிவாரண நிதி திரட்டும் வேலை மகிழ்ச்சி தரத்தக்க வகையில் நடைபெற்று வருகிறது.

சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் சுமார் 15,000 பேரும் தங்களின் ஒரு நாள் ஊதியத்தை (சுமார் ரூ. 50,000) தர தீர்மானித்திருக்கின்றனர்.

அதேபோல, கோவையில் உள்ள தொழிலாளர்களும் இந்த வகைக்கு உதவ முன்வந்திருக்கின்றனர்.

பல மாவட்டங்களிலும் உள்ள தி. மு. கழகத் தோழர்கள் நிவாரண வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருக்கின்றனர்.

தபால் - தந்தி இலாகாவைச் சேர்ந்த எல்லாப் பிரிவு ஊழியர் சங்கங்களின் கூட்டுச் சங்கத்தினர், இலாகாவில் உள்ள ஊழியர்கள் அனைவரும் நிதி திரட்டித் தர வேண்டுமெனக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர். அதற்கான குழு ஒன்று அமைத்து ஜரூராக வசூல் செய்து வருவதாக அறிவித்திருக்கின்றனர்.

நகரில் உள்ள தின இதழான ‘தினமணி’ திரட்டிவரும் நிவாரண நிதிக்கு இதுவரை ஒரு இலட்சம் ரூபாய்க்கு மேல் சேர்ந்திருப்பதாயும், அவ்வப்போது இத்தொகை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருவதாயும் அறிவிக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

மலேயாவில் உள்ள தமிழ் தின இதழான ‘தமிழ் நேசன்’ தமிழ் நாட்டு புயல் நிவாரணத்திற்கு ரூ. 25,000 அனுப்பி வைத்திருப்பது பெருமைக்குரிய ஒன்றாகும்.

சென்னை திரைப்பட நடிகமணிகள் திரட்டிவரும் நிதி, இதுவரை ரூ. 40,000-த்திற்கும் அதிகமாகியிருப்பதாயும், முதல் பங்குத் தொகை நாளையதினம் நிதியமைச்சரிடம் தரப்படுவதாயும் அறிவிக்கின்றனர்.

மேலும் மேலும் பாதிக்கப்பட்ட மக்களின் கண்ணீர் துடைக்கப்படும் வரை, அதற்குத் தேவையான அளவு மக்களும், சர்க்காரும் உதவி செய்யவேண்டியது இன்றியமையாததாகும்.

சென்னை 41-வது வட்ட தி. மு. கழகம் அறிவிப்பு

“புயல் நிவாரண நிதிக்காக உண்டியல் மூலம் வசூலித்தத் தொகை ரூ. 184—7—1 சென்னை மாவட்டச் செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டது,” என்று, 41-வது வட்ட தி. மு. க. கிளைச் செயலாளர் சி. வ. முகிலன் அறிவிக்கிறார்.

‘திருப்பாலக்குடிக்கு நிவாரணம் அளியுங்கள்’

காற்று மழையினால் இப்பகுதியில் பல கூரைவீடுகளுக்கும், கட்டடங்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், தென்னை, மா, வாழைகள் சேதமடைந்ததாகவும் நெற்பயிர்களும் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், ஆகவே விவசாயிகளுக்கு அரசாங்கம் உடனடியாக உதவி அளிக்கவேண்டுமென்றும் திருப்பாலக்குடி தி. மு. கழகச் செயலாளர் கேட்டுக் கொண்டுள்ளார்.

விருதுநகர் கழகத் தோழர் முயற்சி

தோழர் வி. வ. சங்கரபாண்டியன் அவர்கள் நன்முயற்சியால் ரூ. 2,000 பெறுமான துணிகள் திரட்டப்பட்டு, அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

சென்னை மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்கட்கு

★

“நடந்த 11-ம் தேதி நடந்த மாவட்டச் செயற்குழுவில் செய்த முடிவுப்படி, புயல் நிவாரண நிதியில் ஈடுபட்டிருக்கும் கிளைக் கழகங்கள், இம் மாத 20-ந் தேதிக்குள், வசூலித்த பணம், பண்டம், துணிமணி ஆகியவைகளை உடனடியாக மாவட்டக் கழகத்தில் கொண்டுவந்து சேர்க்கும்படிக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

“திராவிடர் திருநாளுக்காக ஒவ்வொரு கிளைக் கழகமும் செலுத்த வேண்டிய பங்கீட்டுத் தொகையான ரூ. 5-ம் இம் மாத இறுதிக்குள் தவறாமல் மாவட்டக் கழகத்தில் செலுத்திவிடும்படி கேட்டுக் கொள்ளுகிறேன்,”

என்று, சென்னை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் இளம்பரிதி அறிவிக்கிறார்.

வட ஆற்காடு மாவட்ட தி. மு. க. தோழர்கட்கு

★

“பொதுச்செயலாளர் அறிக்கைக்கிணங்க நமது மாவட்டத்தில் உடனடியாக உறுப்பினர்கள் சேர்க்கும் முயற்சியில் கிளைக் கழகங்கள் ஈடுபட வேண்டுகிறேன். ஏற்கனவே பதிவு செய்யப்பட்டுள்ள கிளைகள், இன்னும் அதிகமான உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டுகிறேன்.

“தங்களுக்கு எவ்வளவு உறுப்பினர்களைச் சேர்க்கும் தாள்கள் தேவைப்படுகிறது என்பதை உடனடியாக மாவட்டக் கழகத்துக்கு எழுதவும்.

“புதிதாக ஆரம்பிக்கும் கிளைகள் தங்கள் ஊருக்கு அருகாமையிலுள்ள மாவட்டப் பிரதிநிதியிடமோ, அல்லது பொதுக்குழு உறுப்பினரிடமோ அனுமதி பெற்று உறுப்பினர்கள் பதிவு செய்யும் தாள்களைப் பெற்றுக் கொள்ளவும்.

“இதுவரை மாநில மாநாட்டு நிதி அளிக்காத கிளைக் கழகங்கள் உடனடியாக நிதி அனுப்பி வைத்து, உறுப்பினர்கள் தாள்களைப் பெற்றுக் கொள்ளவும். நிதி அனுப்பாத கிளைக் கழகங்களுக்கு உறுப்பினர்கள் தாள் அனுப்பப்படமாட்டாது,”

என்று, வட ஆர்காடு மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் முக்லை-சத்தி அவர்கள் அறிவிக்கிறார்.

காஞ்சி நகரசபை துணைத் தலைவர்

ஏ. கே. தங்கவேலு தேர்வு

காஞ்சி, டிச 16—

காஞ்சிபுரம் நகரசபைத் துணைத் தலைவராக, சுயேச்சை உறுப்பினரான திரு ஏ. கே. தங்கவேலு (முதலியார்) ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

கூட்டத்திற்கு தலைவர் வி. என். பெருமாள் (நாயுடு) தலைமை வகித்தார். காங்கிரஸ்காரரான சி. பி கன்னியப்ப (முதலியார்) பிரரேபிக்க, அருணாசல (முதலியார்) ஆதரிக்க தோழர் ஏ. கே. தங்கவேலு துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்.

நகரசபையில் உள்ள 32 இடங்களில் 19 இடத்தை காங்கிரஸ் கைப்பற்றியிருக்கிறது.

சிறப்புச் சொற்பொழிவு

★

18-12-55 காலை 9 மணிக்கு, திருச்சி தேவர் மன்றத்தில், புயல் நிவாரண நிதியளிப்பு சிறப்புக் கூட்டம், தோழர் அன்பில் தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் மு. கருணாநிதி, எம். எஸ். மணி, ஆர். நாகசுந்தரம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

நன்கொடை: ரூ. 1, அண 8, 4.

நிதி அளிப்பு விழா

தென்னிந்தியக் கலைஞர்கள் புயல் நிவாரண நிதிக்காக வசூல் செய்திருக்கும் நிதியின் முதலாவது தொகையை 18—12—55 காலை 9-30 மணிக்கு, சென்னை-தியாகராய நகர் வாணி மஹாலில், சென்னை நிதி மந்திரி சி. சுப்பிரமணியம் அவர்களிடம் அளிக்கிறார்கள். அதுசமயம் கலைஞர்களும், நன்கொடையாளர்களும் வருகைதந்து நிதி அளிப்பு விழாவைச் சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

★

நிவாரண நிதிக்காக...

18-12-55 காலை 10 மணிக்கு, சென்னை-ஆலந்தூர் விக்டோரியா டாக்கிசில், புயல் நிவாரண நிதிக்காக, மேற்படி டாக்கீஸ் நிர்வாகத்தினரால், தோழர் கே. ஆர். இராமசாமி நடித்த ‘ஓர் இரவு’—படக் காட்சி, தோழர் ஜெமினி கணேசன் தலைமையில் நடைபெறும்.

சினிமா நடிகை ராஜசுலோசனா மேடை மீது தோன்றுவார்.

★

‘உரிமைக் குரல்’

சார்பில்

18-12-55 காலை 10 மணிக்கு, தமிழகம், யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் வெள்ளத்தாலும், புயலாலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதியளிக்க, கொழும்பு மைலன் திரையில், இலங்கை அமைச்சர் வி. குமாரசாமி தலைமையில், தோழர் எம். ஆர். இராதா நடிக்கும் ‘ரத்தக் கண்ணீர்’—படக் காட்சி நடைபெறும்.

அழகிரி நூலகத் திறப்பு விழா

சென்னை ஓட்டேரி திரு. வி. க. மன்றத்தின் அழகிரி நூலகத் திறப்பு விழா, 18—12—55 மாலை 6 மணிக்கு, பெரம்பூர், கான்ரான்ஸ்மித் மைதானத்தில் தோழர் என். கிருட்டிணன் தலைமையில் நடைபெறும் தோழர்கள் கண்ணதாசன், முகவை ஆர். எஸ். பாண்டியன், க. அறிவழகன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 16-வது வட்ட மக்களுக்கு வேண்டுகோள்

இவ்வட்டத்திலுள்ள கலைமன்றச் சார்பில், அப்பகுதியிலுள்ள மன்றங்கள், சங்கங்கள், கழகங்கள் ஒன்றுசேர்ந்து, 18—12—55-ல், 16-வது வட்ட முழுமையிலும் நிவாரண உதவிகளைத் திரட்டுவர். இயன்ற அளவில் உதவி தருமாறு அப்பகுதி மக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சென்னை கல்விச் சங்கம்

18—12—55 மாலை 5 மணிக்கு, சென்னை-பட்டாளம், ஸ்டிரான்ஸ் ரோட், ஆண் பள்ளியில், மேற்படி சங்கச் சார்பில், ‘குறுந்தொகை மாட்சி’ என்னும் பொருள் பற்றி திரு. க. வீ. குருசாமி தலைமையில் திரு. தொ. ரா. ஜெயராமன் பேசுவார்.

ஐ. நா. மேலும் விரிவடைகிறது

16 நாடுகள் புதிதாக இடம் பெறுகின்றன

நியூயார்க், டிச. 15—

ஐக்கிய நாடுகள் சபையில் இடம் கோரி மனுச் செய்திருந்த பதினெட்டு நாடுகளையும் அனுமதிக்க வேண்டும் என்ற முயற்சி தோல்வியுற்றபின், பதினாறு நாடுகளுக்கு இடம் தருவதென ஐ நா. பொதுச் சபை முடிவு செய்திருக்கிறது.

புதிதாக இடம் பெறும் பதினாறு நாடுகளையும் சேர்த்தால் ஐ நா.வில் 76 நாடுகள் இடம் பெற்றவையாயிருக்கும்.

துவக்கத்தில் ஐ. நா. பாதுகாப்பு சபையில் ஏற்பட்ட நெருக்கடியின் விளைவாக, பதினெட்டு நாடுகளும் இன்னும் ஐந்தாண்டுகள் கழித்தே இடம் பெற முயற்சிக்க வேண்டும் என்று கூறப்பட்டுவிட்டது.

பின்னர் ரஷ்யா மேற்கொண்ட முயற்சியின் விளைவாக, பொதுச் சபையின் தனிக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டு 16 நாடுகளைச் சேர்த்துக்கொள்வதென முடிவாகியிருக்கிறது.

அல்பேனியா, ஜோர்தான், அயர்லாந்து, போர்ச்சுகல், ஹங்கேரி, இத்தாலி, ஆஸ்திரியா, ருமேனியா, பல்கேரியா, பின்லாந்து, இலங்கை, நேபாளம், லிபியா, கம்போடியா, லாவோஸ், ஸ்பெயின் ஆகிய 16 நாடுகளும் ஐ நா.-வில் இடம் பெறுகின்றன

இடம் பெறாது போய்விட்ட மற்ற இருநாடுகள், ஜப்பானும் (வெளி) மங்கோலியாவுமாகும்; இரண்டும் ஆசிய நாடுகளாகும்.

சோவியத் ரஷ்யா, பாதுகாப்பு சபையில் இதுகுறித்துக் கொண்டு வந்த தீர்மானமும் ஒருமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டு, பொதுச் சபைக்கு அனுப்பிவைக்கப்பட்டதாம்.

ஜப்பானை மட்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று அமெரிக்கா கொண்டுவந்த திருத்தம், ரஷ்யாவில் நிராகரிக்கப்பட்டது.

துணை நடிகர் சங்கத் துவக்கவிழா

★

19—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை—கோடம்பாக்கம் துணை நடிகர் சங்கத் துவக்க விழா, சிங்கார கிராமணி திடலில் (கோடம்பாக்கம் பஸ் நிலையம் அருகில்) நடிகர் பி. யு. சின்னப்பா அரங்கில் நடைபெறும். தோழர் எம். ஜி இராமச்சந்திரன் மேற்படி சங்கத்தைத் திறந்து வைப்பார். தோழர்கள் வி. நாகையா, எஸ். வி. சகஸ்ரநாமம், எஸ் வி. சுப்பையா, நமச்சிவாயம், கே. பி. தாயமணி ஆகியோர் பேசுவர். கூட்டத்தில் தோழர் என். எஸ். கிருஷ்ணன் அவர்களிடம் புயல் நிவாரண நிதி அளிக்கப்படும்.

நூல், நூற்கப் புதிய......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

குடிசைத் தொழில் மூலம் உயர்ந்தபட்ச நூல் உற்பத்திசெய்ய இந்த இயந்திரம் பயன்படும் என்று நம்பப்படுகிறது. இது 3 அடி நீளம், 2½ அடி அகலம், 4½ அடி உயரம் உள்ளதாம்.

இது ஒரு மேசையின்மீது பொருத்தப்பட்டிருக்கும் என்றும், தையல் இயந்திரத்தை இயக்குவது போன்று இதையும் காலினால் இயக்க முடியும் என்றும், இதை மின்சாரத்தின் மூலம் இயக்குவதானாலும் அதற்கான மின்சார ‘மோட்டார்’ பொருத்தப்படும் என்றும் கூறப்படுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.